# 70 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரி

ரவி சிங்காரம்

சிங்கப்பூர் பலதுறைத் தொழிற் கல்லூரி (எஸ்பி) அடுத்த ஆண்டு கொண்டாடவுள்ள அதன் 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தான் இதுவரை கடந்து வந்துள்ள பாதையை நூல் வடிவில் வெளியிட்டுள்ளது.

பட்டயக் கல்வியை முடித்து வேலைக்குச் செல்லவுள்ள மாணவர்களுக்கு மட்டுமன்றி, வேலை செய்துகொண்டே புதிய திறன் பெற விரும்பும் பெரியவர் களுக்கும் எஸ்பி கற்பித்து வரு கிறது.

பெரியவர்களுக்குக் கற்பிக் கும் விரிவுரையாளர்களின் எண் ணிக்கையை ஐந்தே ஆண்டுக ளில் எஸ்பி மும்மடங்காக்கியுள் ளது.

தொடர் கல்வி, பயிற்சித் திட் டத்தில் பங்கேற்றவர்கள் அனை வரும் 2021ல் செலவிட்ட நேரம் 2.13 மில்லியன் மணி நேரமாக அதிகரித்தது.

வேலை செய்வோரின் தேவை களைப் புரிந்துகொண்டு தொடர் கல்வி, பயிற்சித் திட்டங்கள் வழங்கப்படுவதாக எஸ்பி முதல் வரும் அதன் தலைமை நிர்வா கியுமான திரு சோ வாய் வா கூறினார்.

அரசாங்கம் அக்டோபர் 27-ல் வெளியிட்ட 'முன்னேறும் சிங் கப்பூர்' அறிக்கையின்படி, ஏற் கெனவே அரசாங்க நிதியாதரவு டன் கூடிய பட்டயக் கல்வி அல் லது மேற்கல்வித் தகுதி பெற் றுள்ள சிங்கப்பூரர்கள், மற் றொரு நிதியாதரவு உடைய பட் டயக் கல்வியை மேற்கொள்ள உதவி பெறுவர்.

இதனால், வேலை செய் வோர் பலரும் பலதுறைத் தொழிற்கல்லூரிக்கு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடம் கற்பவர்களின் வசதிக் காக, இணையம்வழி நடத்தப்ப டும் தொடர் கல்வி, பயிற்சித் திட்ட பாடங்களின் அளவை தற் போதைய 30 விழுக்காட் டிலிருந்து 70 விழுக்காடு வரை அதிகரிக்கவுள்ளது எஸ்பி.

இணையத்தள உருவாக்கம், கணினிக் கட்டமைப்பு எனும் இரு புதிய பாடத்திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

rsingaram@sph.com.sg